**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : திருமதி **V.** பார்கவி**.,B.A.,B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 01-ம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, பிலவ வருடம் மாசி மாதம் 17-ஆம்நாள்

------

**அசல் வழக்கு எண்.81/2015-ல் இடைமனு எண்.02/2021**

1. வேம்பு
2. சக்கரவர்த்தி ..மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்...

1. திருநீலகண்டம்
2. பாண்டிதுரை ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 11.02.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு எ. ராம்குமார் அவர்களும் ஆஜராகியும் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரை மற்றும் வழக்கிடை மனு எண். 1/2021-ல் திருத்தம் செய்ய அனுமதிக்கக் கோரி மனுதாரர்கள்/ வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை6, விதி 17-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். அசல் வழக்கை மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர். வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஒரு பகுதியை ஆக்கிரமித்துவிட்டதால் தாவா சொத்தை அளந்து எதிர்மனுதாரர்களின் ஆக்கிரமித்து சுவர் வைத்ததை கண்டறிந்தும், ஆக்கிரமித்த சொத்தின் பரப்பை கண்டறிந்தும், அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரி இடைமனு எண். 1/2021 தாக்கல் செய்து அம்மனு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்த தாவா "பி" அட்டவணைச் சொத்தின் பரப்பை தோராயமாக கீழ்மேல் 35 மீட்டர் என்று வழக்குரையிலும், இடைமனு எண்.1/

2021லும் கூறியுள்ளனர். ஆனால் வழக்குரை சொத்து விபரத்திலும், இடைமனு எண். 1/2021ன் சொத்து விபரத்திலும் தாவா "பி" அட்டவணைச் சொத்து கீழ்மேல் 35 சதுர மீட்டர் என்பதற்கு பதிலாக 55 சதுர மீட்டர் என்று தவறாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. இது முற்றிலும் தட்டச்சு பிழையாகும். இது வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ ஏற்பட்டதல்ல. மேற்படி விவரம் எதிர்மனுதாரர்கள் தற்போது எதிருரை தாக்கல் செய்த பிறகுதான் தெரியவந்தது. அதனை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானது. எனவே இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையிலும், இடைமனு எண்.1/2021லும் திருத்தம் செய்ய வேண்டுமெனக் கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>2-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1-ம் எதிர்மனுதாரரால் தன்னுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள்/ வாதிகள் பிராதை திருத்தம் செய்யக்கோரி ஏற்கனவே தாக்கல் செய்த இடைமனு எண். 350/2019-ல் 6-வது திருத்தத்தில் "பி" அட்டவணைச் சொத்து கீழ்மேல் 55 மீட்டர் என்று கூறி அதன் அடிப்படையிலேயே அந்த திருத்த மனுவானது 12.04.2019-ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை அனுசரித்தே மனுதாரர்கள் திருத்தப்பட்ட பிராதை 22.04.2019 அன்று தாக்கல் செய்துள்ளனர். எனவே இடைமனு எண்.350/ 2019-ல் உள்ள 6-வது திருத்தம் செய்யாமல் இந்த இடைமனு மூலமாக திருத்தம் செய்ய இயலாது. மனுவில் கண்டுள்ளவாறு இடைமனு எண்.1/2021 மற்றும் பிராதிலும் திருத்தம் செய்ய முடியாது. ஏனெனில் ஏற்கனவே இடைமனு எண்.350/2019 இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே தாவா "பி" அட்டவணை சொத்து பிராதில் சேர்க்கப்பட்டுள்ளது. அதிலும் கீழ்மேல் 55 மீட்டர் என்று உள்ளது. எனவே தற்பொழுது இம்மனுவில் கோரியுள்ளவாறு வழக்குரையிலும், இடைமனு எண். 1/2021-லும் சொத்து விபரத்திலும் "பி" அட்டவணை கீழ்மேல் 55 மீட்டர் என்பதை 35 மீட்டா என்று திருத்தம் செய்ய இயலாது. இந்நீதிமன்றம் இடைமனு எண்.350/2019-ல் 12.04.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை திருத்தம் செய்ய இயலாது. வழக்கில் வாதிகளுக்கு நல்ல கட்சி இல்லை என்பதால் இதுபோன்ற குறைபாடுடைய மனுவை தாக்கல் செய்து வழக்கு நடவடிக்கைகளை காலங்கடத்தி வருகிறார்கள். எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். அசல் வழக்கை மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர் என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஒரு பகுதியை ஆக்கிரமித்துவிட்டதால் தாவா சொத்தை அளந்து எதிர்மனுதாரர்களின் ஆக்கிரமித்து சுவர் வைத்ததை கண்டறிந்தும், ஆக்கிரமித்த சொத்தின் பரப்பை கண்டறிந்தும், அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரி இடைமனு எண். 1/2021 தாக்கல் செய்து அம்மனு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது என்றும், எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்த தாவா "பி" அட்டவணைச் சொத்தின் பரப்பை தோராயமாக கீழ்மேல் 35 மீட்டர் என்று வழக்குரையிலும், இடைமனு எண்.1/2021லும் கூறியுள்ளனர் என்றும், ஆனால் வழக்குரை சொத்து விபரத்திலும், இடைமனு எண். 1/2021ன் சொத்து விபரத்திலும் தாவா "பி" அட்டவணைச் சொத்து கீழ்மேல் 35 சதுர மீட்டர் என்பதற்கு பதிலாக 55 சதுர மீட்டர் என்று தவறாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது என்றும், இது முற்றிலும் தட்டச்சு பிழையாகும் என்றும், இது வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ ஏற்பட்டதல்ல என்றும், மேற்படி விவரம் எதிர்மனுதாரர்கள் தற்போது எதிருரை தாக்கல் செய்த பிறகுதான் தெரியவந்தது என்றும், அதனை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானது என்றும், எனவே இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையிலும், இடைமனு எண்.1/2021லும் திருத்தம் செய்ய வேண்டுமெனக் கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/ வாதிகள் பிராதை திருத்தம் செய்யக்கோரி ஏற்கனவே தாக்கல் செய்த இடைமனு எண். 350/2019-ல் 6-வது திருத்தத்தில் "பி" அட்டவணைச் சொத்து கீழ்மேல் 55 மீட்டர் என்று கூறி அதன் அடிப்படையிலேயே அந்த திருத்த மனுவானது 12.04.2019-ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதனை அனுசரித்தே மனுதாரர்கள் திருத்தப்பட்ட பிராதை 22.04.2019 அன்று தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே இடைமனு எண்.350/2019-ல் உள்ள 6-வது திருத்தம் செய்யாமல் இந்த இடைமனு மூலமாக திருத்தம் செய்ய இயலாது என்றும், மனுவில் கண்டுள்ளவாறு இடைமனு எண்.1/2021 மற்றும் பிராதிலும் திருத்தம்

செய்ய முடியாது என்றும், ஏனெனில் ஏற்கனவே இடைமனு எண்.350/2019 இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே தாவா "பி" அட்டவணை சொத்து பிராதில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், அதிலும் கீழ்மேல் 55 மீட்டர் என்று உள்ளது என்றும், எனவே தற்பொழுது இம்மனுவில் கோரியுள்ளவாறு வழக்குரையிலும், இடைமனு எண். 1/2021-லும் சொத்து விபரத்திலும் "பி" அட்டவணை கீழ்மேல் 55 மீட்டர் என்பதை 35 மீட்டர் என்று திருத்தம் செய்ய இயலாது என்றும், இந்நீதிமன்றம் இடைமனு எண்.350/2019-ல் 12.04.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை திருத்தம் செய்ய இயலாது என்றும், வழக்கில் வாதிகளுக்கு நல்ல கட்சி இல்லை என்பதால் இதுபோன்ற குறைபாடுடைய மனுவை தாக்கல் செய்து வழக்கு நடவடிக்கைகளை காலங்கடத்தி வருகிறார்கள் என்றும், எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை மனுதாரர்கள்/ வாதிகள் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர் இம்மனுவில் வழக்கின் சொத்து விபரத்திலும், வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரிய இடைமனு எண்.1/2021-லும் "பி" அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்தில் கீழ் மேல் அளவான 55 மீட்டர் என்பதை நீக்கிவிட்டு 35 மீட்டர் என்று சேர்க்க வேண்டும் என்று இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் கோரியுள்ளவாறு வழக்குரையிலும், இடைமனு எண். 1/2021-லும் சொத்து விபரத்திலும் "பி" அட்டவணை சொத்துவிபரத்தில் உள்ள கீழ்மேல் 55 மீட்டர் என்பதை 35 மீட்டர் என்று திருத்தம் செய்ய இயலாது என்றும், இந்நீதிமன்றம் இடைமனு எண்.350/2019-ல் 12.04.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை திருத்தம் செய்ய இயலாது என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்தபொழுது மனுதாரர்/வாதி வழக்குரையிலும், இடைமனு எண். 1/2021-லும் 2017-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தின் வடபுறத்தில் தென்வடல் சுமார் 60 சென்டி மீட்டரும் கீழ்மேல் சுமார் 35 மீட்டரும் ஆகக்கூடுதல் 21 சதுர மீட்டருக்கு சமமான 226 சதுரடி இடத்தை ஆக்கிரமித்துள்ளதாக சொல்லவிட்டு "பி" அட்டவணை சொத்து விபரத்தில் மட்டும் **" தென்வடல் 60 சென்டி மீட்டர் கீழ்மேல் 55 மீட்டர் கூடுதல் 21 சதுர மீட்டருக்கு சமமான 226 சதுரடி"** என்று சொல்லப்பட்டுள்ளது தெரியவருகிறது. "பி" அட்டவணைச்சொத்தின் அளவு 21 சதுர மீட்டர் என வழக்குரையிலும், இடைமனு எண்.1/2021லும்

கூறப்பட்டுள்ள நிலையில் அதன் தென்வடல் அளவு 60 சென்டி மீட்டர் என்பதைப்பொறுத்து பூசல் இல்லாத நிலையீல் கீழ்மேல் 35 மீட்டர் என்று கணக்கிட்டாலே 21 சதுர மீட்டர் விஸ்தீரணம் என்பது சரியாகு இருக்கும். மேலும் மனுதாரர் தன் மனுவின் சொத்துவிபரத்திலும், திருத்தப்பட்ட வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்திலும் 35 மீட்டர் என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 55 மீட்டர் என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளது தட்டச்சு பிழைதான் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் மனுதாரர்களுக்கு தட்டச்சு பிழையை சரி செய்து கொள்ள ஒரு வாய்ப்பளிக்கும்விதமாகவும், மேற்படி தட்டச்சு பிழையை திருத்தம் செய்வதால் வழக்கின் தன்மை மாற போவதில்லை என்பதாலும் மனுதாரர்களின் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே "பி" அட்டணைச் சொத்தின் தென்வடல் கீழ்மேல் 35 மீட்டர் என்பதற்கு பதிலாக 55 மீட்டர் என்று தவறுதலாக தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ளது என்றும், அதனை சரியான அளவான கீழ்மேல் 35 சதுரமீட்டர் என திருத்தம் செய்ய வேண்டும் என்று மனுதாரரின் இம்மனுவின் கோரிக்கையானது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளதாகவே இந்நீதிமன்றம் ' கருதுகிறது. தட்டச்சு பிழைகளை எந்த நேரத்திலும் திருத்தம் செய்ய இயலும் என்ற அடிப்படையில் மனுதாரர்/ வாதி இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரை மற்றும் வழக்கிடை மனு எண். 1/2021-ல் திருத்தம் செய்ய அனுமதிக்கக் கோரி மனுதாரர்கள்/ வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவின் கோரிக்கையானது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளதால் இம்மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுவின் தன்மை கருதி மனுவிற்கான செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 01-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V PARKAVI

Digitally signed by V PARKAVI
Date: 2022.03.03 12:24:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

பின் இணைப்பு

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | - இல்லை- |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் | -இல்லை- |
| மனுதாரர் தரப்பு சான்றாணங்கள் | - இல்லை- |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை- |

V PARKAVI Digitally signed by V PARKAVI Date: 2022.03.03 12:25:15 +0530

மா.உ.நீ.

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 81/2015-ல்
இடைமனு எண். 02/2021
நாள் - 01.03.2022.